இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - 2012

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இற்கு முரணாக, ஊழியர் கடன் தொடர்பான கடன் பாதிப்பு நலனாக பிற செயற்பாட்டு வருமானத்தில் ரூபா 648,000 உடன் மூலதன உரிமைக் கூற்றில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 757,000 என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வரி ரூபா 21,520,839 ஆகும். எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக் கொடுப்பனவு ரூபா 19,230,161 ஆல் அதிகரிக்கப்பட்டுரூபா 40,751,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் மீள்வர்த்தக உடன்படிக்கையின் மூலம் உருவான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டில் மீள் வர்த்தக உடன்படிக்கை விற்பனையாகக் கணக்கில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டினது மீள்வர்த்தக உடன்படிக்கை வருமானம் ரூபா 19,632,842 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) தொழில் வழங்கற் கடன்பட்டோர்**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறானரூபா 653,646,346 தொழில் வழங்கு கடன்பட்டோரில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐயக்கடன்களுக்கான நிதியேற்பாடு 19 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 126,345,830 ஆகும்.

(ii) கூட்டுத்தாபனம் கடன் அடிப்படையில் ஒளிபரப்பிற்கான நேரத்தை வழங்கும் சந்தர்ப்பங்களில் தொழில் வழங்கற் கடன்பட்டோர் உருவாகின்றது. கடன் வழங்கற் கொள்கைகளுக்கமைய, கடனுக்கான கால எல்லை 1 மாதமாகும். எனினும், கடன்பட்டோரில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் தொகை 76 சதவீதத்தைக் குறிக்கும்ரூபா 494,197,047 ஆகவும் 3 மாதங்களுக்கு மேற்பட்டோர் தொகை 34 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 224,558,218 ஆகவும் இருந்தன. 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில் வழங்கற் கடன்பட்டோர் மீதி ரூபா 130,092,778 ஆகவுமிருந்தது. இது 20 சதவீதமாகும்.

(iii) தொழில் வழங்கற் கடன்பட்டோர் மீதியில் 22 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 146,549,495 கடனானது அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டியனவாகும். இக் கடன்பட்டோரில் ரூபா 9,229,054 அறவிட முடியாதனவும் கால எல்லையைக் கடந்து விட்டதுமான கடன் மீதிகள் ஆகும்.

(iv) தொழில் வழங்கற் கடன்பட்டோர் மீதியில் ஆறு சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 42,147,586 அரசியல் கட்சிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியனவாகும். மீதிகள் யாவும் முற்றாக அறவிடப்பட முடியாத கடன் மீதியாக இனங்காணப்பட்டிருந்தன.

(v) தொழில் வழங்குனரது பெயரைக் குறிப்பிடாத 2 உடன்படிக்கைகள்

தொடர்பாக 15 முதல் 17 ஆண்டுகள்வரையான காலமாக நிலவி வரும் கடன்பட்டோர் மீதியின் பெறுமதிரூபா 320,600 ஆகும்.

(vi) உடன்படிக்கைக்குரிய சகல ஒளிபரப்பு நேரமும் வழங்கப்பட்டதன் பின்னர் விலைப்பட்டியல் வழங்கப்பட்டு பணத்தைப் பெறுவதே சாதாரண வர்த்தக உடன்படிக்கை தொடர்பாகப் பணம் அறவிடுவதற்கான கூட்டுத்தாபனத்தின் கொள்கை ஆகும். இக் கொள்கையால் கூட்டுத்தாபனத்தால் அறவிட வேண்டிய கடனை அறவிடுதலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**(ஆ) நானாவித கடன்பட்டோர்**

மீளாய்வாண்டு முடிவில் கூட்டுத்தாபனத்தின் ரூபா 52,440,000 நானாவித கடன்பட்டோரிடமிருந்து ஐயக் கடன்களுக்கான நிதியேற்பாடு 35 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 18,578,707 ஆகவிருந்தது. அம் மீதியில் 2 ஆண்டுகள் மற்றும் அதற்கும் மேற்பட்ட காலமாக தனி நபர்களிடமிருந்து ரூபா 248,545 தொகையும் வெளிநாட்டு ரூபவாஹினி நிறுவனங்களிடமிருந்து ரூபா 542,554 தொகையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து ரூபா 17,858,971 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன்,மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய மின் கட்டணமாகிய ரூபா 609,497 மற்றும் மருத்துவ விலைப்பட்டியலைச் மீளளிப்புச் செய்கையில் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 621,033 மீதியும் உள்ளடங்கியிருந்தன. நானாவித கடன்பட்டோராகியரூபா 52,440,000 தொகையில் 35 சதவீதம் ஐயக் கடனாக ஒதுக்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் கடன் அறவீடு தொடர்பான கட்டுப்பாடு நலிவான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) முற்பணம் வழங்குதலும் அதனைத் தீர்த்து வைத்தலும்**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டில் வெளிநபர் ஒருவருக்கு நிகழ்ச்சியைத் தயாரிப்பதற்காக உருவாக்கரூபா 250,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அது தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ii) 2008 ஆம் ஆண்டில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கணணி நிகழ்ச்சித்திட்டம்

மற்றும் தொடர்புடைய பணிகள் சம்பந்தமாக ரூபா 450,000 கொடுப்பனவு செயய்பட்டிருந்தது. எனினும், அப்பணி நடப்பாண்டு முடிவிலும் முடிவுறாதிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) நிதிக்கூற்றுக்களில் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத ஆவணச்சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | கடன்பட்டோர் | 653,646,346 | புதிய கணக்கீட்டு நியமங்களுக்கமைய வகைப்படுத்தப்பட்ட பட்டோலை |
| (ii) | செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசப்பாய்ச்சல் | 23,798,000 | கணிப்பீட்டிற்குரிய தகவல்கள் |
| (iii) | பாதகமான இலாபம் | 648,000 | பட்டோலை / கணிப்பீட்டிற்குரிய தகவல்கள் |
| (iv) | நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பிரசாரம் மற்றும் கொள்வனவுச் செலவினம் | 162,733,993 | பட்டோலை / கணிப்பீட்டிற்குரிய தகவல்கள் |
| (v) | முதலீடு – லங்காபுவத் | 1,104,000 | உரித்துச் சான்றிதழ் |
| (vi) | நடைபெறும் வேலை | 132,125 | பட்டோலை |
| (vii) | மோசடி தொடர்பான தகவல்கள் | கணிப்பிட முடியவில்லை | கணக்காய்வில் கோரப்பட்ட தகவல்கள் |
| (viii) | கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஒளிபரப்புக் கூடம் அமைந்துள்ள காணி (தீர்வை,வரிப் பெறுமதி) | 46,018,720 | சட்டரீதியான சான்று (உரித்துச் சான்றுறுதி ஒப்படைக்கும் பத்திரம், வர்த்தமானி அறிவித்தல்) |
| | மொத்தம் | 888,081,184 | |

(ஆ) மீள் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் கூட்டுத்தாபனம் பெறும் திரைப்படங்களது பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு, நிகழ்ச்சிகளைக் கொள்வனவு செய்கையில் திரைப்படத்தின் விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தும் அளவுகோல் யாது எனும் தகவல் கணக்காய்விற்கு வழங்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள்மற்றும் முகாமைத்துவத் திர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமைத்துவத் தீர்மானங்களுடனானதொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை பந்தி 8.3.5 | நிதியத்தின் தோற்றுவாய் எதுவாயிருப்பினும் புதிதாக படிகளை ஏற்பாடு செய்யும்போதும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டுமாயினும்,அதற்கமைய நடக்காது 2012 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படியாக ரூபா 19,546,793 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 மார்ச் 28 ஆந் திகதிய நிதி அமைச்சுச்செயலாளரின் எம்/டீஆர்/1/2005 ஆம் இலக்கக் கடிதம் | ஆகக் குறைந்த மாதாந்த வாடகையை அதிகரிக்கும் விதத்தில் வாகனங்களுக்கும் எரிபொருளுக்கும் ரூபா 4,020,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை பந்தி 6.5.1 | 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரைவு அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை | விதந்துரைக்கப்பட்டவற்றிக்கு முரணாக சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு உரித்தானதாகக் குறிப்பிட்டு MM சம்பள அளவுத்திட்டத்தில் 77 உத்தியோகத்தர்களுக்கும் JM மற்றும் MA சம்பள அளவுத்திட்டத்தில் 96 |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 17,733,961 போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2009 மார்ச் 24 ஆந் திகதிய 13/2008(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உரித்துடைய மாதாந்த எரிபொருள் லீட்டர் அளவிலும் கூடுதலாக 2 உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதி ரூபா 747,600 ஆகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 47,478,000 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு ம்ுனரான இலாபம் 172,079,000 ஆனமையால் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 124,601,000 ஆல் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ‘‘செனல் ஐ’’அலை வரிசையின் வருமானம் முன்னைய ஆண்டைவிட 75 சதவீதத்தால் அதாவது ரூபா 637,390,000 ஆல் குறைவடைந்தமையே இதற்குப் பிரதான காரணியாக அமைந்தது.

### 2.2 பகுப்பாய்வுடன் கூடிய மீளாய்வு

கணக்குகளில் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 47,478,000 நிரூபணமாகிய போதும். வெளிநாட்டு மற்றும் உள்ளூர் மானியமாக இலாபத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ரூபா 13,596,000 கூட்டுத் தொகையுடைய காலக்கழிவு, கடன்பாதிப்பு இலாபமாகிய ரூபா 648,000 கடன்பட்டோர் கணக்குகளில் காணப்பட்ட செலவு மீதியான ரூபா 21,911,053 மற்றும் வெளிநபர்கள் பயன்படுத்தாத முன்னைய ஆண்டுகளுக்குரிய மீள் விற்பனை தொடர்பான உடன்படிக்கைப் பெறுமதியான ரூபா 19,632,842 என்பன சீராக்கல் செய்யப்பட்டதன் மூலம் இந்த இலாபம் ரூபா 8,309,895 நட்டமாக உருவெடுத்திருக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

### 2.3 நிறுவனத்திற்கெதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 11 வெளிநபர்களால் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனப் பதவியணியினராலும்05

வழக்குகள்தொடரப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது 2 வழக்குகள் முடிவுக்கு வந்திருந்தன. இவ் வழக்குகளுக்காக வழக்கறிஞர் கட்டணமாகவெளி வழக்கறிஞர்களுக்காக ரூபா 6,913,073 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வெளிநபர்களால்தொடரப்பட்ட 7 வழக்குகளுக்குரிய வாதிகள் தரப்பினால்கோரப்பட்டஇழப்பீட்டுத் தொகைரூபா 1,012,400,000 தொகையாகவும் 250,000 அமெரிக்க டொலர்களாகவும் இருந்தன. அவ்வாறே ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தால் வெளிநபர்களுக்கு எதிராக 25 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவ் வழக்குகளின் மூலம் அறவிட எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 116,961,735 ஆகும். அதில் 3 வழக்குகள் மீளாய்வாண்டின்போது முடிவடைந்திருந்ததுடன் அறவிடப்பட்ட தொகை ரூபா 375,000 ஆகும். இவ் வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணமாக வெளி வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 1,449,340 ஆகும். நிதிக்கூற்றுக்களில்காண்பிக்கப்பட்ட வழக்குகள் தொடர்பான நிகழத்தக்க பொறுப்புரூபா 2,052,000,000 ஆகும்.

## 2.4 அசாதாரண செலவின அதிகரிப்பு

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கீழே குறிப்பிடப்பட்ட செலவின விடயங்களை முன்னைய ஆண்டின் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் அசாதாரண அதிகரிப்பு காணப்பட்டது.

| **செலவின விடயம்** | **செலவினம் 2012** | **செலவினம் 2011** | **முன்னைய ஆண்டிலும் கூடியது** | **முன்னைய ஆண்டிலும் கூடியது, சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **%** |
| வருடாந்த ஞாபகார்த்த விழா | 9,898,686 | 665,000 | 9,233,686 | 1388 |
| <u>தேசத்திற்கு மகுடம்</u> கலைஞர்கள் செலவினம் | 579,600 | 213,000 | 366,600 | 172 |
| ஏற்றி இறக்குவதற்கான கட்டணம் | 1,050,912 | 305,000 | 745,912 | 245 |
| நானாவித செலவினம் | 76,393 | 23,000 | 53,393 | 232 |

(ஆ) 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் ''ரணவிறுரியல்ஸ்டார்'' நிகழ்ச்சிக்கான பல்வேறு வகையான செலவினங்களின் அதிகரிப்பு 58 முதல் 183 சதவீதம் வரையான வீச்சில் அமைந்திருந்தது. ரணவிறு ரியல் ஸ்டார் II நிகழ்ச்சியால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 34,612,395 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) பிரசார விளம்பரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபனம் பத்திரிகை நிறுவனங்களுடன் மீள் விற்பனை உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. ஆயினும்,அவ்வசதிகளைப் பயன்படுத்தாது ஆண்டு நிறைவுப் பிரசார விளம்பரங்களுக்காக புதினப் பத்திரிகை நிறுவனங்களுக்கு ரூபா 1,565,000 செலவிடப்பட்டிருந்தது. எனினும், கூட்டுத்தாபனம் பத்திரிகை நிறுவனங்களுடன் மீள்விற்பனை உடன்படிக்கைகளில் ஈடுபட்டு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,373,291 வசதிகளை பயன்படுத்தாதிருந்தது.

**(ஆ) மீள் விற்பனை உடன்படிக்கை**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் மீள் விற்பனை உடன்படிக்கைக்கென வழங்கப்பட்ட ஒளிபரப்புக் காலத்தின் பெறுமதி ரூபா 66,958,158 ஆகும். அதன் பொருட்டுக் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டசேவைகளது பெறுமதி ரூபா 36,223,000 ஆகும். இதனால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 30,735,158 ஆகும்

(ii) கூட்டுத்தாபனம் ஒளிபரப்பிற்கான காலத்தை வழங்கியிருந்தபோதும், கூட்டுத்தாபனம்மீண்டும் சேவைகளைப் பெறாத 7 முதல் 12 ஆண்டுகளாக உள்ள மீள் விற்பனை உடன்படிக்கை மீதிகளது பெறுமதி ரூபா 6,403,762 ஆகும். 2003,2004,2005 ஆம் ஆண்டுகளுக்கான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாது கூட்டுத்தாபனம் ஒளிபரப்புக் காலத்தை வழங்கியதற்கான பெறுமதி ரூபா 6,680,112 ஆகும். இதனைக் காசாகவோ அல்லது

---

சேவைகளைப் பெறுவதன் மூலமோபெற்றுக்கொள்வதற்கு 2013 ஜூன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தில் திரைப்படம் ஒன்றிற்காக மீள் விற்பனை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன்உடன்படிக்கைஉடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட தினத்தன்றே குறித்த திரைப்படத்தைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய போதிலும் இதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் போனமையால் 2013 ஜூன் 30 வரையான தாமதக் காலம் 17 மாதங்கள் ஆக காணப்பட்டது. இத் திரைப்படம் தொடர்பாகக் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்த ஒளிபரப்புக் காலத்தின் பெறுமதி ரூபா 13,144,000 ஆகும்.

(iv) 2012 ஆம் ஆண்டில் மீள் விற்பனை உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் பெறக்கூடியதாகவிருந்தும் அதனைப் பெற்றிராத சேவைகளின் பெறுமதி ரூபா 27,373,291 ஆகும்.

(v) மீள் விற்பனை உடன்படிக்கை தொடர்பாகப் பெறவேண்டிய ரூபா 4,600,000 பெறுமதியான 125 வானூர்திப்பயணச்சீட்டைப் பெறுவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) தொலைக்காட்சி நாடகங்களைக் கொள்வனவு செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. தொலைக்காட்சி நாடகங்களைக் கொள்வனவு செய்கையில் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படாது ரூபா 4,375,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்த தொலைக்காட்சி நாடகம் ஒன்றை ஒளிபரப்பியமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,569,545 இழப்பு ஏற்பட்டது.

ii. தொலைக்காட்சி நாடகம் ஒன்றை ஒளிபரப்புவதற்கான தகைமையைப் பெறுவதற்கு பரீசீலனைக் குழுவில் மதிப்பெண்கள் 50 புள்ளிகள் அல்லது அதற்கு மேலாகபெறப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக ரூபா 27,775,000 பெறுமதியுடைய 2 தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

iii. தொலைக்காட்சி நாடகத்திற்கான கொடுப்பனவைத் தீர்மானிக்கையில் தொலைக்காட்சி மதிப்பாய்வுக் குழுவின் மதிப்பெண்கள் கருத்திற் கொள்ளப்படுவது அடிப்படை விடயமாகும். எனினும்,தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்ட 10 தொலைக்காட்சி நாடகங்களில்ரூபா 54,290,000 பெறுமதியான 4 தொலைக்காட்சி நாடகங்களைக் கொள்வனவு செய்கையில்மதிப்பெண்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iv. கட்டணமின்றி வழங்கப்பட்ட ஒளிபரப்பு நேரத்தின் பெறுமதியாகிய ரூபா 10,000.000 மற்றும் ரூபா 22,518,080 என்பன செலவிடப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றை வெளியிட்டமையால் முகவர் தரவுக் கட்டணத்தை அறவிடுவதற்கு முன்னர் கூட்டுத்தாபனம் சம்பாதித்த வருமானம் ரூபா 24,293,647 ஆகும். இதனால் அந் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 8,424,433 இழப்பு ஏற்பட்டிருந்தது.

**(இ) முதலீடுகள்**

-----------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1985 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளின் போது ‘‘லங்கா புவத’’ நிறுவனத்தில் ரூபா 1,104,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு வரை பங்கிலாபம் எதுவும் கிடைக்கப்பெற்றிராததுடன் அம் முதலீடு தொடர்ந்தும்பேணப்பட்டிருந்தது.

(ii) வங்கி மேலதிகப் பற்றைப் பெறுவதற்கு இலங்கை வங்கியில் உள்ள ரூபா 22,000,000 தொகையான நிலையான வைப்பு பிணையாக வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக கணக்குகளுக்கான குறிப்புகளில் புலனாகியிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்கி மேலதிகப் பற்று வட்டி ரூபா 1,260,957 ஆகும்.

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

------------------------------------------------------------

சாத்தியவள ஆய்வின்றி 2009 ஆம் ஆண்டில் ஒளிபரப்பு ஆரம்பமாகிய NTV அலைவரிசைக்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2012 வரை செலவிடப்பட்ட தொகை ரூபா 18,186,000 ஆகும். வருமானம் எதுவும் ஈட்டப்படவில்லை. அவ்வாறே, ஒளிபரப்பை விரிவுபடுத்துவதற்காக தனியார்

நிறுவனம் ஒன்றினது ஒளிபரப்புத் தூண் ஒன்று பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டபோதும், அதன் மூலமான ஒளிபரப்பின் தரங்களும் அது சென்றடையும் பகுதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என பரீசீலிப்பதற்குத் தேவையான செய்தித்தகவல்களைச் சேகரிப்பதற்கும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**
**-----------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த அடிப்படையில் கூட்டுத்தாபனத்தால் ஆட்சேர்க்கப்பட்டு கூட்டுதாபனச் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டிற்கென ரூபா 3,743,720 சம்பளமாகவும், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு, மிகையூதியம் எனவும் வழங்கப்பட்டுள்ளது அதில் ரூபா 1,458,892 இல் 5 உத்தியோகத்தர்களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாகும்.

(ஆ) பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றியும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்காதுகூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு மதியுரைஞர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 600,000 செலவிடப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக இறுதி கூட்டத் தொடர் ஒன்று நடாத்தப்பட்டு அதற்கு ரூபா 129,811 செலவிடப்பட்டிருந்தது. அது மதிப்புரைக் கட்டணத்தின் 22 சதவீதமாகும்.

(இ) முறையான அதிகாரமின்றி குறிப்பிடப்பட்ட ஒளிபரப்புக் காலப் பெறுமதியில் ஏறக்குறைய 50 சதவீத வர்த்தக்கழிவு மற்றும் ஒரு மாத காலக் கடன் காலம் வழங்கப்பட்ட திரைப்படம் ஒன்றின் மூலம் 2013 ஜூன் 30 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை ரூபா 743,633 ஆகும். பணத்தைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் 14 மாதங்களாகும். அத் தொழில் வழங்குனர்களுக்கே உரித்தான பிரசார நிறுவனம் ஒன்றிற்கு அக்கொடுக்கல் வாங்கல்களுக்காகரூபா 154,780 முகவர் தரகாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) திரைப்படம் ஒன்றின் பிரசார விளம்பரத்திற்குக் குறிப்பிடப்பட்ட ஒளிபரப்பு நேரப் பெறுமதியில் 50 சதவீத விசேட கழிவும்ரூபா 6,982,000 பெறுமதியான ஒளிபரப்பு நேரம் இலவசமாகவும் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கைக்கு முரணாக 3 நிகழ்ச்சிகள் கூடுதலாக ஒளிபரப்பப்பட்டிருந்தன. இப்பிரசார விளம்பரங்கள் தொடர்பாக

கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 9,982,000 ஆகும். இத்திரைப்படத்தின் சமகால வெளியீட்டிற்குரிய முகவர் நிறுவனத்திற்கு ரூபா 792,900 முகவர் தரகாக வழங்கப்பட்டுமிருந்தது.

(உ) உத்தியோகபூர்வ பயணங்களுக்கு வாகனங்களைப் பெறுவதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு வாகனங்களை வாடகைக்குப் பெறுகையில் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 22/99 இற்கமைய உரித்தான கிலோ மீட்டர் தூரம் மதிப்பாய்வு செய்யப்படாது வாடகை அடிப்படையில் 2 மோட்டார் வாகனங்களை வழங்கியமையால் ஏற்பட்ட மேலதிக கிரயம் ரூபா 900,000 ஆகும்.

(ஊ) பயணத்தில் ஈடுபடுத்தப்படாதுள்ள வாகனத்தை விடுவிக்காது கூட்டுத்தாபன வளாகத்தில் அதனைத் தரித்து வைத்து மாதாந்தம் பயணஞ் செய்யும் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பதிலாக மாதத்திற்குரிய குறிப்பிட்ட கிலோ மீட்டர் கணிப்பிடப்பட்டு அதற்கமையக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் மேலதிகமாகப் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 33,700 ஆகும்.

(எ) ரூபவாஹினி பயிற்சி நிறுவனத் தலைவரது கடமைகளுக்கென விடுவிக்கப்பட்ட வாடகை வாகனம் ஒன்றிற்காகச்செலவிடப்பட்டரூபா 188,140 மீளளப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபவாஹினி கட்புலன் நூலக நடவடிக்கைகள் முறையாகவும் வினைத்திறனுடனும் இயங்குவதற்கு அந் நடவடிக்கைகள் கணணிமயமாக்கப்பட்டு முன்னேற்றும் நோக்குடன் ரூபா 1,734,000 செலவில் 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த தன்னியக்க விலைச்சுட்டி முறைமையின் இலத்திரனியல் ஒளிப்பேழைப் பாதுகாப்பு முறைமை (EAS System) (Automated Barcode Solution)சில பாகங்களும்2013 யூன் மாதம் முடிவுறும் வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அவ் அன்டனாவின் நிலை குறித்து வருடாந்த கையிருப்புமெய்மையாய்வு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறியியல் பிரிவின் ரூபா 18,053,000 இற்கான உதிரிப்பாகங்கள் சலனமற்ற கையிருப்பாகக் காணப்பட்டது.

**3.5 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் பெறப்படாத சேவைகளுக்காக ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டரூபா 187,500 குறித்த நபரிடமிருந்தோ அல்லது அக்கொடுப்பனவிற்குப் பொறுப்பான நபர்களிடமிருந்தோ அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அது பதிலழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித் தயாரிப்பிற்கு 2006,2007 ஆம் ஆண்டுகளில் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட முற்பணம் ரூபா 78,050 ஆகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அதனை அறவிட நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின்போது அத்தொகையை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**3.6 தாமதமாகிய செயற்திட்டம்**

செய்திப் பிரிவின் நிர்மாண வேலை நடவடிக்கைகளுக்கு 2005,2006 ஆம் ஆண்டுகளில் உசாத்துணைக் கட்டணம் மற்றும் மண் மாதிரிகளைப் பரீசீலிப்பதற்காகரூபா 183,051 செலவிடப்பட்ட போதிலும், குறித்த நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நடைபெறும் வேலைக் கணக்கில் இனங்காணப்படாத மீதியாக ரூபா 132,125 உள்ளடக்கப்பட்டிருந்தது.

**3.7 பதவியணி நிர்வாகம்**

2012 யூன் 30 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 985 ஆகும். உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 1007 ஆகும். மிகையான 22 ஆகக் காணப்பட்டது.

**3.8 வாகனப் பாவனை**

கூட்டுத்தாபனத்தின் வாகனக் குழாம் 53 வாகனங்களைக் கொண்டிருந்தது. அதில் 10 வாடகை அடிப்படையில் பெறப்பட்டவையாகும். கடமைக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் 6 ஆகும். 2012 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபன வாகனங்களில் 1,178,120 கிலோ மீட்டரும் வாடகை அடிப்படையிலான வாகனங்கள் மூலம் 401,856 கிலோ மீட்டருமாக மொத்தமாகப்

பயணஞ் செய்த தூரம் 1,579,976 கிலோ மீட்டராகும். பராமரிப்புச் செலவினம் ரூபா 8,531,196 ஆகவும் எரிபொருள் செலவினம் ரூபா 15,805,019 ஆகவுமிருந்தது. அதற்கமைய, ஒரு கிலோமீட்டருக்கு ஏற்பட்ட பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவினம் முறையே ரூபா 7.24 ஆகவும்ரூபா 13.74 ஆகவும் இருந்தது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தால்மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 76 நாட்கள் தாமதித்து 2013 மே 15 அன்றேசமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல் திட்டத்திலும் பாதீட்டிலும்உள்ளடக்கப்படாதரூபா 50 மில்லியன் பெறுமதியான நடவடிக்கைகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டின் போது கேள்விகள் கோரப்பட்டிருந்தன.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த போதும் செயற்பாட்டில் இல்லாத 5 செயற்திட்டங்களது மொத்தப் பெறுமதி ரூபா 77.5 மில்லியன் ஆகும்.

(இ) 2012 ஆம் ஆண்டின்போது பாதீட்டின் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்படாது செயற்படுத்தப்படும் 6 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 150.6 மில்லியன் ஆகும்.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

கூட்டுத்தாபனத்தில் நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் உள்ளார். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் கூறின் ஊழியர்களது எண்ணிக்கை 6 ஆகும். முதல் அரையாண்டில் 22 கணக்காய்வு ஐய வினாக்களும் இரண்டாவது அரையாண்டில் 24 கணக்காய்வு ஐய

வினாக்களும் அனுப்பப்பட்டிருந்தன.

### 4.4 உபாயத்துடன் கூடிய விற்பனைத் திட்டம்

கூட்டுத்தாபனத்தின் சக்தி. நலிவுகள், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதன்வாயிலாக கூட்டுத்தாபனத்திற்கு இலாபம் ஏற்படும் விதத்தில் விற்பனை மேம்பாட்டிற்கான உபாயத்துடன் கூடிய விற்பனைத் திட்டம் ஒன்று 2012 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்படவில்லை.

### 4.5 கணக்காய்வுக் குழு

2005 ஜூலை 1 ஆந் திகதி பீஈடீ/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வுக் குழு குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையேனும் கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டின் போது இரு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

குறித்த வருமானத்திற்கேற்ப மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் சில வருமான விடயங்களது பாதீட்டு இலக்கை விட 25 முதல் 44 சதவீத அளவிலான வருமான அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன் 33 முதல் 1062 வரையான வருமானக் குறைவு ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே செலவினம் சரிவர மதிப்பீடு செய்யப்படாமையால் 117 சதவீதத்தால் செலவு அதிகரித்திருந்ததுடன் 14 முதல் 65 சதவீதம் வரையிலான செலவினக் குறைவும் அவதானிக்கப்பட்டன. இதற்கமைய, 2012 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் பாதீட்டை ஆக்கபூர்வமான நிர்வாகக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப்பயன்படுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரதுகவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) ஊழியர் கடன் கட்டுப்பாடு
(ஈ) முற்பணத்தை தீர்த்து வைத்தல்
(உ) மீள் விற்பனை உடன்படிக்கைகள்
(ஊ) ஒளிபரப்பு நேர வருமானச் சேகரிப்பு
(எ) கணக்கீடு